# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.89/2021

### அ.சா. 18 (LW –22 )

| **பெயர்** | மைக்கேல் ராஜ் | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **17.07.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல்4 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மைக்கேல் பாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு சங்கல்பட்டி பிரிவில் இருந்து வந்த போது அப்போது காவல் ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்த போது என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் **அ.த.சாஆ.15** ஆக குறியிடப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்றால் நான் இருசக்கர வாகனத்தில் வந்த போது நிறுத்தி லைசன்ஸ் இருக்கிறதா என்று கேட்டார்கள் நான் இல்லை என்று சொன்னேன் மேற்படி அத்தாட்சியில் கையொப்பம் போட சொன்னார்கள் நான் போட்டேன், அந்த அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் **அ.த.சா.ஆ.16** ஆக குறியிடப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**மேற்படி சாட்சியை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

26.09.2016 அன்று காலை 08.30 மணிக்கு நிலக்கோட்டை காவல் ஆய்வாளர் கொலை சம்பந்தமாக வரைபடம் வரைந்த போது நான் அருகில் இருந்தேன் என்றும், அந்த இடத்தில் இருந்த இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை எடுத்து அத்தாட்சியில் கைப்பற்றி என்னிடம் கையொப்பம் கேட்ட போது மேற்படி வரைபடத்திலும், அத்தாட்சியும் கையொப்பம் செய்து விட்டு, எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.17 19:19:04 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.